**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 386/2009**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 4 |
| Name (திரு/திருமதி) | : சக்கரவர்த்தி |
| Father's Name/ Husband's Name | : விஷபதாஸ் |
| Village & Taluk | : திண்டிவனம் |
| Calling | : வங்கி மேலாளர் (ஓய்வு) |
| Age | : 76 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.03.2026**

1 எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317/ 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது 2 ம் எதிரி இறந்துவிட்டார்.

**முதல் விசாரணை :**

1. நான் கடந்த 31.08.2008 அன்று விழுப்புரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி செஞ்சி கிளையின் மேலாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். இவ்வழக்கில் எதிரிகளான கற்பகம் மற்றும் வெங்கடேசன் ஆகியோர்களை எனக்கு தெரியும். கடந்த 2006 ம் வருடம் கள்ளப்புளியூர் பஞ்சாயத்தில் மோசடி நடந்ததாக வளத்தி காவலர்கள் என்னிடம் வந்து ஆவணங்கள் கேட்டார்கள். அதன் பேரில் நான் அவர்களுக்கு ஆவணங்களை கையொப்பமிட்டு வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் வங்கி கணக்கு எண்.30012 கள்ளப்புளியூர் பஞ்சாயத்து தொடர்புடைய சேமிப்பு வங்கியின் 23.02.2006 முதல் 03.10.2006 வரையிலான Statement என்னால் வழங்கப்பட்டதாகவும். மேற்படி Statement ன் நகல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன் அசலை அரசு தரப்பில் இன்று மொமோ மூலமாக தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி அசல் ஆவணத்தை குறியீடு செய்வதற்கு எதிரி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. **மேற்படி ஆட்சேபனையுடன் மேற்படி ஆவணம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கில் தொடர்புடைய காசோலை யாரால் எழுதப்பட்டது மற்றும் யாரால் பணம் எடுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் நான் 2006 ம் ஆண்டு மேற்படி வங்கியில் பணியில் இல்லை. 2007 ம் ஆண்டு தான் மேற்படி வங்கியில் மேலாளராக பணியாற்றினேன். ஆவணங்களின் அடிப்படையில் தான் மேற்படி Statement யை வழங்கினேன் என்றால் சரிதான்.

மேற்படி காசோலையில் உள்ள கையொப்பம் போலியானதா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2. பொதுவாக அரசு தொடர்பான பணத்தை எடுக்க வேண்டும் என்றால் சில வழிமுறைகள் உள்ளது என்றால் சரிதான். காசோலையை பஞ்சாயத்து தலைவரால் அல்லது துணைத்தலைவரால் தனிப்பட்ட முறையில் நிரப்பி வங்கி கணக்கில் இருந்து பணத்தை எடுக்க இயலாது என்றால் அவ்வப்போது சட்டங்கள் மாறுவதால் அவர்கள் எடுத்ததாக சொல்லப்படும் காலகட்டத்தில் எவ்வாறான சட்டம் இருந்தது என்பது எனக்கு தெரியாத காரணத்தினால் அது குறித்து என்னால் சொல்ல இயலாது. எந்த காலகட்டத்திலும் வட்டார வளர்ச்சி அலுவலரின் கையொப்பம் பெறாமால் அரசு பணத்தை எடுக்க இயலாது என்றால் அது விவரம் எனக்கு தெரியாது.

3. காவலர்கள் என்னை விசாரிப்பதற்கு சம்மன் சார்பு செய்தனரா என்றால் இல்லை ஆனால் விசாரணைக்கு வருமாறு அழைத்தனர். காவலர்கள் என்னை விசாரித்து எனது வாக்குமூலத்தை எழுதி பதிவு செய்து கொண்டனரா என்றால் இல்லை. அ.சா.ஆ 2 ஆவணத்திற்கும் இவ்வழக்கின் எதிரிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும், காவலர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/-vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.